செ.வெ.எண் :16/பிப்ரவரி நாள்:11.02.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## பிரதம மந்திரி விவசாயி கௌரவ நிதி திட்ட பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

பிரதம மந்திரியின் விவசாயி கௌரவ நிதி திட்ட பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டை (Kisan Credit Card) வழங்குவதற்கான சிறப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் மத்திய அரசாங்கத்தால் 08.02.2020 அன்று துவங்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சாரங்களின் மூலம் பெரும்பாலான விவசாயிகளுக்கு பயிர் கடன் அட்டை வழங்கப்படவுள்ளது. பிரதம மந்திரி கௌரவ நிதித் திட்ட பயனாளிகள் (PM-KISAN திட்டம்) மற்றும் தகுதி உள்ள அனைத்து விவசாயிகளும் தங்களின் சேமிப்பு கணக்கு உள்ள வங்கி கிளை மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி உழவர் கடன் அட்டை பெற்று மானிய சலுகையுடன் வங்கி கடன் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே உழவர் கடன் அட்டை வைத்துள்ள விவசாயிகள் கடன் தொகையின் வரம்பை உயர்த்த விண்ணப்பிக்கலாம். செயல்படாத உழவர் கடன் அட்டை வைத்துள்ளோர் அதை செயல்படுத்தவும் மற்றும் புதிய கடன் வரம்பிற்கு அனுமதியும் பெறலாம்.

அது மட்டுமின்றி உழவர் கடன் அட்டைதாரர்கள் கால்நடை மற்றும் மீன் பிடிப்பிற்கான பராமரிப்பு செலவுகளுக்கான பராமரிப்பு தொகையை வரம்பில் சேர்ப்பதற்காக வங்கி கிளையை அணுகலாம். PM-KISAN திட்ட விவசாயிகளுக்கு கடன் அட்டை பெறுவதற்கு இத்திட்டத்தின் இணையதளம் மூலம் குறுஞ்செய்தி அனுப்பப்படும். இத்திட்ட பயனாளிகள் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை களப்பணியாளர்கள் மூலம் பெறப்படும் விண்ணப்பத்தில் தங்களது நிலம் மற்றும் பயிர் விவரங்கள் பூர்த்தி செய்து அதனுடன் வேறு எந்த வங்கி கிளையிலும் கடன் அட்டை பெறவில்லை என்பதற்கான உறுதி பிரமாணம் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பத்தை பொது சேவை மையங்கள் மூலமும் சமர்ப்பிக்கலாம். எனவே, இந்த வாய்ப்பினை பயன்படுத்தி இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் குறிப்பாக பிரதம மந்திரியின் விவசாயி கௌரவ நிதி திட்ட பயனாளிகள் அனைவரும் உழவர் கடன் அட்டை பெற்று பயனடையலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**